**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**
**STC.NO. 543/2020 PW-3**

Name :- நவீன்குமார்
Husband/Father Name :- ஆனந்தபிள்ளை
Village /Area :- ஆற்காடு
Taluk :-
Occupation :- ஐ.டி.பி.ஐ வங்கி ராணிப்பேட்டை கிளை மேலாளர்
Age :- 36
Religion :-
Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 12.12.2023 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது. .

**முதல் விசாரணை**

1. இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க கிளை மேலாளரால் வழங்கப்பட்ட அதிகார ஆவணம் **ம.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி சண்முகம் உங்கள் வங்கி கிளையில் தான் கணக்கு வைத்துள்ளாரா என்றால் ஆமாம். அவருடைய வங்கி கணக்கு எண்.1012104000129404 ஆகும். எதிரி சண்முகம் உங்களுடைய வங்கியில் எத்தனை ஆண்டுகளாக கணக்கு வைத்திருக்கிறார் என்றால் 2019 ல் இருந்து இருக்கலாம். 246141 மற்றும் 246142 காசோலைகள் எதிரிக்கு எங்கள் வங்கியால் வழங்கப்பட்ட காசோலைகள் ஆகும். எதிரியினுயைட வங்கி கணக்கில் பதிவிறக்கம் செய்யபட்ட ஸ்டேட்மெண்ட் **ம.சா.ஆ.8** ஆகும். பதிவிறக்கம் செய்யப்பட்ட மெமோ **ம.சா.ஆ.9** ஆகும். அந்த 2 காசோலைகளும் வங்கியில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

1. வழக்கு காசோலைகள் எந்த வருடத்தில் கொடுக்கப்பட்டது என்றால் அதை நான்

ஆவணங்களை பார்த்து தான் சொல்லமுடியும். எதன் அடிப்படையில் எதிரி கணக்கில் போதிய பணம் இல்லை என்று முடிவு செய்தீர்கள் என்றால் எங்கள் வங்கியில் காசோலை குறித்த பரிவர்த்தனைகளை மேற்கொள்ள சென்னையில் ஒரு அமைப்பு இயங்கி வருகிறது. அங்கே நாங்கள் காசோலையை ஸ்கேன் செய்து அனுப்பி விடுவோம், அவர்கள் கொடுக்கும் தகவலின் அடிப்படையில் காசோலை கணக்கில் பணம் உள்ளதா என்பதை நாங்கள் முடிவு செய்வோம். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**
**STC.NO. 543/2020 PW-2**

Name :- சுரேஷ்
Husband/Father Name :- ஜெயபாலன்
Village /Area :- ஆற்காடு
Taluk :-
Occupation :- ஆக்சிஸ் வங்கி கிளை மேலாளர்
Age :- 40
Religion :-
Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 12.12.2023 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது. .

**முதல் விசாரணை**

1. புகார்தாரர் மணிகண்டன் உங்களுடைய வங்கி கிளையில் தான் கணக்கு வைத்துள்ளாரா என்றால் ஆமாம். அவருடைய வங்கி கணக்கு எண்.91101005764915‍1 ஆகும். மணிகண்டன் உங்களுடைய வங்கியில் எத்தனை ஆண்டுகளாக கணக்கு வைத்திருக்கிறார் என்றால் 2020 ல் இருந்து இருக்கலாம். 27.10.2020 அன்று மணிகண்டன் 2 காசோலைகளை வசூலுக்கு செலுத்தினார். அவைகள் முறையே 246141 மற்றும் 246142. அந்த 2 காசோலைகளும் 28.10.2020 அன்று வங்கியில் போதிய பணம் இல்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

1. எதன் அடிப்படையில் எதிரி கணக்கில் போதிய பணம் இல்லை என்று முடிவு செய்தீர்கள் என்றால் எங்கள் வங்கியில் காசோலை குறித்த பரிவர்த்தனைகளை மேற்கொள்ள ஐதராபாத்தில் ஒரு அமைப்பு இயங்கி வருகிறது. அங்கே நாங்கள் காசோலையை ஸ்கேன் செய்து அனுப்பி விடுவோம், அவர்கள் கொடுக்கும் தகவலின் அடிப்படையில் காசோலை கணக்கில் பணம் உள்ளதா என்பதை நாங்கள் முடிவு

செய்வோம். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

D NAVEEN DURAI BABU Digitally signed by D NAVEEN DURAI BABU

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.